உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி ௧௮] ரௌத்திரி-ஞு சித்திரைமீ [பகுதி ௬.

Vol. XVIII. April—May 1920. No. 6.

## மதுரைத்தமிழ்ச்சங்கம்.

### தனித்தமிழ்ப்பரீக்ஷை வினா.

---

### பாலபண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

இ. வை. அனந்தராமையர்,

---

### இலக்கணம் I.

---

சித்தார்த்தி ஞு பங்குனிமீ 24உ (5-4-20) 10-மணிமுதல் 1-மணிவரை.

(அம்சம் 60.)

I. 1. தொல்காப்பியவுரையில் திருக்குறள் மூன்று பால்களையுடையதென எங்கே எதற்காகக் கூறப்பெற்றுள்ளது?

2. சிலப்பதிகாரமென்பது எதற்கு உதாரணமாகக் காட்டப்பெற்றிருக்கிறது?

3. நான்மறை யென்பதற்கு நச்சினார்க்கினிய ரெழுதிய விசேடவுரை என்னை?

4. அவர் செய்யுணடையை உரைநடையாக எழுதியிருத்தற்கு உங்கள் பாடத்திலிருந்து ஓர் உதாரணம் எழுதுக.

5. எழுவகை அளவைகள் யாவை?

6. நால்வகைப் புணர்ச்சிகள் எவை?

7. நெடியதன்முன்னர் எவ்வொற்றுக்கள் கெடும்?

8. வலித்தல் முதலியவிகாரங்கள் ஒருமொழிக்கேயுரியனவென்பது எதனால் தெரிகின்றது?

9. தம் நம் நும் என்பவை முதல்குறுகியவையென்றும் குறுகாதவையென்றும் கூறப்படும்; இவை பொருந்துமாறு எங்ஙனம்?

10. 'திருச்சிற்றம்பலம்' என்பதை ஒருசொல்லென்பார்கருத்தென்னை? இதனை வலியுறுத்துவன யாவை?

11. "ஆறன்கிளவி முதனீடும்மே", "சுட்டுமுதலாகியவாய்த விறுதி" இவற்றுக்கு விளக்கமாக உரையும் உதாரணமும் தருக.

12. வாராததனால் வந்ததுமுடித்தல், எற்புழிக்கோடலென்னும் உத்திகட்கு ஒவ்வோருதாரண மெழுதுக.

II. 1. அது + அன்று இவற்றை நன்னூல்விதிகாட்டியும் தொல்காப்பியவிதிகாட்டியும் புணர்க்க.

2. யானென்னுஞ்சொல் எவ்வெத்திணைக்குரியதென்று இவ்விருநூலினுங் கூறப்பெற்றிருக்கின்றது?

3. அன்றியின்றியென்வினையெஞ்சிகரம், தொடர்பினுளுகரமா' மென்பர். இவற்றுள் தொல்காப்பியச்சூத்திரத்துக்கூறப்படாதது யாது?

4. 'ஆ எ ஒ அம்மூன்றும் வினா' என்னும் தொல்காப்பியனாருக்கு எ, யா வினாவாதற்கண் என்ன கருத்து? விளக்குக.

5. நச்சினார்க்கினியர் எ யா வினாக்களைக்குறித்து என்னமுடிவு செய்திருக்கிறார்?

## நம்பியகப்பொருள்.

III. 1. அகப்பொருள்விளக்கவுரையில், எட்டுத்தொகைகளுள் மேற்கோளாகவாராத நூல் யாது? பத்துப்பாட்டினுள் மேற்கோளாகவந்துள்ள நூல்கள் எவை?

2. குலமடமாதரொடு கலமிசைச் சேறலாகாதென்பதற்கு மேற்கோள் யாது?

3. குலமட மாதரொடு பாசறைச்சேறல் பழுதன்றோ? "முல்லை நாறுங் கூந்தல் கமழ்கொள, நல்ல காண்குவ மாஅயோயே, பாசறை யருந்தொழி லுதவிநம், காதனன் னாட்டுப் போதரும் பொழுதே" இதற்கென்ன சமாதானம்?

4. குறையுறவுணர்தல் எப்பொழுது? அதன் பாகுபாடுகள் எவை?

5. சேறே லென்றவள் சீறடி தொழுதல் எந்தப்பகுப்பிற்குரிய கிளவி?

6. வன்புறை வன்பொறைகளின் பொருளையும் காமக்கிழத்தியர் காதற்பரத்தையரின் இலக்கணங்களையும் விளக்குக.

7. அறத்தொடு நிலைதோன்றும் ஈவிடங்க ளெவை?

8. "செயலையம்பகைத்தழை வாடுமென்னும்" "அஞ்சுவரக் கடுங் குரல் பயிற்றுதிமே" "கானமுமினியவா நும்மொடு வரினே" இவை முறையே எவ்வெப்பகுப்பிலுள்ள என்ன என்ன கிளவிகள்?

9. "மறையோர்முதற் பதின்மருங்கேட்ப" எவற்றை? பதின்மர் யார்யார்?

10. கைக்கிளை அகப்புறக்கைக்கிளைகட்கு முறையே இலக்கணம் என்ன?

---

## பாலபண்டிதர் வகுப்பு.

பரீக்ஷகர்

மு. வேங்கடசாமிநாட்டார்.

---

## இலக்கணம் II.

---

சித்தார்த்தி௵ பங்குனி௴ 24௳ (5-4-20) 2-மணிமுதல் 5 மணி வரை.

(அட்சம் 60.)

I. (1) வாகை, காஞ்சி என்றதிணைகளின் இலக்கணம் என்ன? இவை எவ்வெத்திணைகளின் புறனென்று தொல்காப்பியர் கூறுவர்?

(2) கொற்றவைநிலை, உன்னநிலை, கந்தழி: இத்துறைகள் எந்த இரண்டிரண்டு திணைகளில் வருகின்றன?

(3) கொடிநிலை, கந்தழி, வள்ளி: இவற்றுக்கு நச்சினார்க்கினியர் என்ன பொருள் கூறுவர்?

II. (1) வாணிகவாகை, தாபதவாகை, நாவொழ்த்து, புலவராற்றுப்படை, புறநிலைவாழ்த்து: இவற்றுள் எவையேனும் மூன்று துறைகட்குச் செய்யுள் எழுதுக.

(2) 'ஆமினிமூப்பும்........ஐயைந்துமாய்வதறிவு', 'ஒன்றிவிரண்டாய்ந்து...........எழ்கடிந்தின்புற்றிரு': இவற்றிற்குத் துறைப்பெயர் கூறுக.

(3) பாதீடு, கொற்றவை, மாராயம், களமர், களவழி, பொருநன், பாசறை, கட்டூர்: இவற்றுக்குப் பொருளும், பொருட் காரணமும் எழுதுக.

III. (1) கொய்யாக்குறிஞ்சி, உன்னநிலை, வாய்ப்புள், ஆனந்தப்பையுள்' வெள்ளணி: இவற்றை விளக்குக.

(2) 'காமப்பகுதி கடவுளும் வரையார்', 'குழவிமருங்கினும் கிழவதாகும்' என்றிங்ஙனம் தொல்காப்பியர் கூறும் பொருள்களைத்துணிதற்கு வெண்பாமாலை உதவியமாறு காட்டுக.

(3) அரசன் ஐந்தொழிலும், அவைக்குரிய எட்டும் எழுதுக.

IV. (1) பொருத்தமபத்தில் எழுத்தாற் கொள்ளப்படுவன எவை? எப்பொருத்தங்கள் இன்றியமையாதன என்பர்?

(2) பிள்ளைக்கவியின் காப்புப்பருவத்தில் எத்தெய்வங்களைத் தொகுத்துக்கூறுதலே மரபாகும்? பாட்டியல்கூறும் முறையை மாற்றி யார்யார் காப்புப்பருவம் பாடியுள்ளார்கள்?

(3) பஞ்சகம், பதிகம், சதகம், என்பனபோலும்பெயர்களைத் தமிழாற்கூறுதல் வழுவாமா? ஆராய்ந்து கூறுக.

V. (1) கலம்பகம், பரணி என்ற பெயர்களின் பொருளை ஆராய்க.

(2) பரணி, நான்மணிமாலை, உலா, தூது: இவற்றின் இலக்கணம் எழுதுக.

(3) 'அதர்ப்பட யாத்தல்' என்பதன் பொருள் என்ன?

VI. (1) உரைச்செய்யுளின்வகையினை விவரிக்க.

(2) ஒருத்தல், சேவல்: இவை எவ்வெவற்றின் ஆணினையுணர்த்துவன?

(3) பனையானது புல், மரம் என்பவற்றுள் எதன்பாற்படும்? அதன் உறுப்புக்களின் பெயர்களைக் கூறுக.

## பாலபண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

ரெ. அப்புவையங்கார்.

## இலக்கியம் 1.

சித்தார்த்தி௵ பங்குனி௴ 25௳ (6-4-20) 10-மணிமுதல் 1-மணிவரை.

(அம்சம் 90)

I. (1) திருமுருகாற்றுப்படை யென்னும் பெயருக்கும் மற்றைய ஆற்றுப்படையென்னும் பெயர்களுக்கும் பொருள் கூறுமிடத்துள்ள வேற்றுமையை விளக்குக?

(2) திருமுருகாற்றுப்படையிற்கூறியவிஷயத்தைச் சுருக்கிப் பத்துவரிக்குமேற்படாமலெழுதுக?

(3) பலர்புகழ்ஞாயிறு கடற்கண்டாங்கு இதனைத் தொழிலுவமமாகக் கொண்டாற் பொருள்கூறுவதெங்ஙனம்?

(4) வாள்போழ்விசும்பின், நன்னர்நெஞ்சத்தின்னசை, அம்பொதிபுட்டில், அரும்பெறன்மரபிற்பெரும்பெயர், நலம்புரிகொள்கைச்செம்மலுள்ளம்—இவற்றிற்குப் பொருளென்?

(5) அறுவேறுவகையினஞ்சுவரமண்டி இதற்கு இரண்டுவகையாகப் பொருள்கூறுவர்; எப்படி?

II. (1) முருகக்கடவுளது கண்ணி தார் எவை?

(2) சேய் என்னும்பொருள்குறித்த வேறுபெயர்களெவை?

(3) ஆறுமுகங்களிலேதாவதொருமுகத்தின் றொழிலும் அதற்கேற்றகைகளின்றொழில்களும் வழுவாதெழுதுக?

(4) நால்வேறியற்கைப் பதினொருமூவர் என்றது யாரை? விளக்குக.

(5) பிரமசரியவிரதத்தினரை எப்படிச்சிறப்பித்துக்கூறியுள்ளார்?

III. (1) நாமகளிலம்பகமெனப் பெயரெய்தியதற்குக் காரணமென்ன?

(2) பின்வருபவர்கள் யார்? விசயை, வயந்தமாலை, சண்பகமாலை, சுநந்தை, கட்டியங்காரன், மதனன், கந்துக்கடன், நந்தட்டன், அச்சணந்தி, உலோகமாபாலன், ஸ்ரீவர்த்தமானன், சுபுலவிபுலர்.

(3) பிறைகொள்வாளின் மீனென இதற்குபமேயமென்ன?

(4) இராசமாபுரத்துச்செல்வநிறைவுக்குக்கூறிய உவமையென்ன?

(5) பொன்மாடத்துச்சியின் நீலமணிக்குடங்கள்விளங்குவதை எப்படி உத்பிரேக்ஷிக்கிறார்?

IV. (1) பின்வரும்பாட்டை வசனக்கிரமப்படுத்தியெழுதிக் கருத்துங் கூறுக?

இரிந்ததேன்குவளையினெற்றிதைவர
முரிந்துபோதவிழ்ந்துகொங்குயிர்க்குமுல்லையின்
அரும்புசேர்ந்தணிஞிமிறார்ப்பவாய்பதம்
விருந்தெதிர்கொண்மெனத்தழுவிவீழ்ந்தவே.

(2) பின்வரும் பாட்டிற்குப் பொழிப்புரை யெழுதுக?

சோர்புனன்முகிறலைவிலக்கித்தூங்கல
மார்புகொண்டார்ந்ததூரலவண்சுனை
யார்வுறுபலாப்பழமழிந்தநீள்களம்
போரினுன்மலிந்துடன்பொலிந்தநீரவே.

(3) குழுவினீங்கியோகொடு — கறையறமுயல்வதோர் கடவு ளொத்தது:-எது? இது எதனது சிறப்புக்கூறுமிடத் துள்ளது?

(4) நிமித்திகனென்னுமமைச்சன் அரசுரிமையைக் கட்டியங்கார னிடம் ஒப்புவிக்கலாகாதென்றதற்குச் சச்சந்தன் கூறிய மறுமொழி யென்ன?

(5) அமைச்சன் சச்சந்தனுக்குக் காமத்தால் யார் யார் என் னென்னகுறையுற்றனரென்றுகூறினன்?

V. (1) ஈங்கென்வரவென்ற கோவலனுக்கு மாங்காட்டுள்ளோன் கூறியதென்ன?

(2) இடைச்சேரியிற் குரவைக்கூத்தாடிய தெதற்கு?

(3) கண்ணகிக்குக் கோவலனுடையமுற்பிறப்புணர்த்தியது யார்?

(4) கண்ணகியை அக்கினிதேவன் மதுரையையெரிக்க அனு மதிகேட்டபொழுது அவன் சொன்னதென்ன?

(5) "காண்டகுமரபினவல்லமற்றவை" இதற்கு எவ்வெவ்வித மாகப் பொருள்கூறுகின்றனர்?

VI. (1) வாரணங்கழிந்து, நெடும்போத்தம், சாத்தொடு போந்த, வருந்துசெல்வருத்தம், வேதினத்துப்ப, இடிதரு முளியம், மலர்பூந்தருத்தி, இளைசூழ்மிளை, இதிற் குறிட்ட சொற்களுக்குப் பொருளென்ன?

(2) வயிரம், முத்து இம்மணிகளுக்குக் கூறும் முக்கியமான குற்றங்களின் பெயரென்ன? மாணிக்கமணியி னான்குஜாதி எவை?

(3) பிலத்துவாரத்துள்ள மூன்றுபொய்கைகளின்பெயரென்ன? அப்பொய்கைகளிலாடுவோரடையும் பயன் கூறிய பிராமணனுக்குக் கவுந்தியடிகள் கூறியதென்ன?

(4) குலத்தருநெறி கவர்க்கும் என்றலென்ன?

(5) கோவலன் நீருண்ணும்விருப்பால் ஒருபொய்கையையெய்தியபொழுது அங்கு நடந்ததென்ன?

VII. (1) கிள்ளிவளவனை ஆலூர் கிழார்பாடிய இயன்மொழியில் "பகைவர்நாட்டிலுள்ள பரிசிலரும் நின்னாட்டையுள்ளுவர்" என்பதற் கென்னென்ன காரணங் கூறியிருக்கின்றனர்?

(2) மேற்குறித்த அரசனை மாறோக்கத்துநப்பசலையார் பாடிய இயன்மொழியில், ஈகை, அடுதல், முறைநின்புகழன்று என்றது என்னென்னபெருமையை விளக்கும்?

(3) நீயே — புறவினல்லலன்றியும்பிறவும்—பலவும்விடுத்தோன் மருகனை—என்றசெய்யுள் யார் யாரை எப்பொழுது பாடியது? இதன் திணையுந் துறையு மெவை?

(4) நாடனென்கோவூரனென்கோ-பாடிமிழ்பனிக்கடற்சேர்ப்பனென்கோ-என்னும்பாடல் ஆற்றுப்படையாவது எப்படி? இதிற் கூறிய அரசன் யார்? இவன் முல்லைநிலத்துக்குமுரியனென்றது எதனாற் பெறப்படும்?

(5) வைகல்எண்டேர்செய்யுந்தச்சன் — திங்கள்வலித்தகாலன் னோன்;

ஒருபிடிபடியுஞ்சீறிடம்,எழுகளிறுபுரக்கும்நாடுகிழவோனே.
இவற்றுற்கூறிய சிறப்பு இன்னின்னதென விளக்குக?

## பாலபண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

மு. கதிரேசச்செட்டியார்.

---

## இலக்கியம் II.

---

சித்தார்த்தி௵ பங்குனி௴ 25௳ (6-4-20) 2 மணி முதல் 5 மணி வரை.

(அம்சம் 90.)

### I. திருக்குறள்.

1. கடவுளையுணர்தற்குரிய கேட்டல் முதலிய மூன்றுபாயங்களையுங் கூறுங்குறள்களெவை? அவை அவற்றில் எவ்வாறு புலப்படும்?

2. இந்திரனை மூலத்தானும் உரையானுங் குறிப்பிடுங்குறள்களெவை?

3. "யானெனதென்னுஞ்செருக்கு" "வேண்டாமையென்னுஞ்செருக்கு" "தீவினையென்னுஞ்செருக்கு" 'ஆற்றவாராற்றல்' "மறத்திற்குமஃதேதுணை" "மடமை' மடவார்கணுண்டு" "தாந்தந், தகுதியான்வென்றுவிடல்" பொருள் கூறுக.

4. "பற்றுகபற்றற்றான் பற்றினை......விடற்கு" "நாளெனவொன்று போற்காட்டி......பெறின்" இவற்றிற்குப் பரிமேலழகர்கூறிய பொருள்களை உள்ளவாறு எழுதுக.

5. "மூலப்பகுதி ஒன்றிற்றோன்றியதன்மையிற் பகுதியேயாவதல்லது விகுதியாகாது" 'காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றிவருதலிற் பிறவிப்பெருங்கடலென்றார்" "பயனை ஆறென்றார் பின்னதாகலின்" "வலியினிலைமையானென்ற அடையானும், மேய்ந்தற்று என்னுந் தொழிலுவமையானும் வல்லுருவத்தோடு மனவழிப்படுதவென்பது பெற்றாம்" இவ்வுரைப்பகுதிகளை விளக்கிக் காட்டுக.

6. இயல்புடைய மூவர் யாவர்? "துறந்தார்க்குத் துவ்வாதவர்க்கும்" துறந்தார் யார்? துறக்கமெய்துவார்க்கு ஆமாயினும் வீடெய்துவார்க்காகாதது யாது? பிறவித்துன்பங்கள், பிறவிக்கேதுவாவன, உற்சர்ப்பிணி, அவசர்ப்பிணி, என்பன யாவை? "ஐயுணர்வெய்தியக்கண்ணும்" ஐயுணர்வு யாது?

7. "தவமுந்தவமுடையார்க்காகும்......மேற்கொள்வது" "வேண்டிய வேண்டியாங்கெய்தலால்.........முயலப்படும்" இவற்றானறியப் படும் விரோதத்தையும் அதனைப் பரிகரிக்குமுறையும் விளக்கி யெழுதுக. முற்குறளாற் றவஞ்செயக்கருதுவோனறியக்கிடப்பது யாது?

## II. திருக்கோவையார்.

1. "தெய்வத்தைமகிழ்தல்" "புணர்ச்சிதுணிதல்," இவ்விரண்டும் எத்திணைப்பாற்படும்? எக்காரணத்தால்? மெய்ப்பாடு, பயன் என்பன யாவை?

2. "அணியுமமிழ்துமென்னாவியுமானவன்" "தவவினைதீர்ப்பவன்" "தில்லைமாதே" "அரனம்பலம்போற்றேயத்ததாய்" "பெருங்கனியார் கொடிவார் நமக்கினி நோதக" "கடிதோட்டகளவகத்து" "பிறவிகெட்டின்றழிகின்றதாக்கியதாளம்பலவன்" "படிச்சந்தமாக்கும் படமுளவோ" பதப்பொருள் விசேடவுரை வரைக.

3. "வாட்டம் வினாதல்" என்பதென்ன? ஈது யாண்டுநிகழும்? இயற்கைப்புணர்ச்சி யிறுதியில்நிகழாமைக்குக் காரணங் கூறுக?

4. "மிக்கோனுயிலுங் கடிவரையின்றே" என்னும் விதியறியக்கிடக்குஞ் செய்யுள் யாது? அதன்கண் எவ்வாறு அறியப்படும்? "தலைப்படு சால்பினுக்குத் தளரேன்......யாவரையுந் தேற்றுவனெத்துணையும்" யார் கூற்று? ஈண்டுப்போதருந் தற்புகழ்ச்சிக்குற்றம் எதனாற் பரிகரிக்கப்படும்?

5. "கோம்பிக்கொதுங்கிமேயாமஞ்ஞை" இப்பாட்டிலுள்ள உபமான உபமேயங்களை விளக்கியெழுதுக.

6. "சூளாமணியும்பர்க்காயவன்" என்னுஞ் செய்யுட்குத் திணைமுதலிய அகப்பாட்டிலக்கணங்களை வரைதலோடு "தாயச்சங்கூறிவரைவுகடாத"ற்குரிய செய்யுளையும் எழுதுக.

7. "மெல்விரல் வருந்த, மென்னனையாய் மறியே பறியேல் வெறியார் மலர்க,ளின்னன யான்கொணர்ந்தேன்" யார் யார்க்குக் கூறியது? இப்பகுதிக்கு விசேடவுரை கூறுக.

## III. இராமாயணம்.

1. "ஒதியவுடம்புதோறுமுயிரெனவுலாயதன்றே" "செல்லுறுகதியிற்செல்லும்வினையெனச்சென்றதன்றே" இவ்வுவமைகளிலுள்ள பொதுத்தன்மையை விளக்கி எழுதுதலோடு உபமேயங்களின் அளவால் உபமானங்களில் அறியக்கிடக்கும் இயைபு இன்னதென்பதையும் வரைக.

2. "குற்றபாகு கொழிப்பவர்" என்னுஞ் செய்யுள் எக்கில வருணனை? எவ்வாறு வினை முடிக்கப்படும்? "ஏகம் முதற் கல்வி......பழுத்தது போலுமன்றே" பொழிப்புரை வரைக.

3. தசரதன் நிலங்காத்தலையும் உயிர்களைக்காத்தலையும் கவி எவ்வாறு வருணிக்கிறார்? செய்யுள் கூறாது விஷயங்களைமாத்திரம் சுருக்கி எழுதுக.

4. “நமித்திரர் நடுக்குறும்” “ஜலசாயநூலாராக்கியவசிட்டன்” “நன்னெடுந்தவன் றுணைநவையில்செய்கைநீ” “அளைபுகுமரவினோடலவன் வாழ்வுற” “ஆலரும்மென்மைநேரநிந்துதிட்டலால்” “சொல்லொக்குங்கடியவேகசசுடுசரம்” என்னும் செய்யுட் பகுதிகளுக்குப் பொருள் கூறுக.

5. “மெய்ய நின்னுரைவேதமெனக்கொடு, செய்கையன்றோ அறஞ்செயு மாறென்றான்” யாவன்? யாரைநோக்கிக்கூறியது? சந்தர்ப்பம் யாது?

6. “பாருமோடாது நீடாது” என்னுஞ் செய்யுட்குப் பதவுரை விசேடவுரை வரைக.

7. கம்பர் கவித்திறத்தைப்பற்றிய முக்கியவிஷயங்களைப் பதினைந்து வரிக்குக் குறையாமலெழுதுக.

## IV. தேவாரம்.

1. சிவபிரான் அணிந்தவையாகத் திருவிருத்தத்திற் காணப்படும் ஐந்து மலர்களெவை? பாசுரப்பகுதியும் எடுத்துக் காட்டுக.

2. சிவபிரான் யானையுரிபோர்த்திருக்குங்கால் நுதற்கண்ணும் பாம்பும் பிறையும் எவற்றையொப்பத்தோன்றின? பாசுரத்தையும் எழுதிப் பொருளுங் கூறுக.

3. இறைவன் உயிர்களிடத்துச்செய்யுங்கருணை எத்தனை வகைப்படும்? அவற்றைக் குறிப்பிடும் பாசுரம் யாது? எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன. இறைவன் உயிர் அறிவில் விளங்கும் அறிவுருவன் என்பதைக் குறிப்பிடும் பாசுரப்பகுதி யாது?

4. இறைவன் திருமுடியையும் அவர்சடைக்கண்மதியையும் மிகச்சிறப்பித்துக்கூறும் பாசுரங்கள் இரண்டு எழுதுக.

5. “என்றுந்தன்பிறப்பையரியான்” “வெந்துயர்த்துக்கமெல்லாம் ஆவித்தநின்றகழ்ந்தன” “உம்மையவர், கொண்டியிற்பட்டு மறக்கினும்என்னைக்குறிக்கொண்மினே” “பின்னையொற்றியெல்லாஞ்சோன்றுகண்டாய்” பொருள் கூறுக.

6. அருச்சுனன்செய்திகளைக் குறிப்பிடும் பாசுரப்பகுதி மூன்றும் அமர்நீதிநாயனாரைப்பற்றிய பாசுரமொன்றுங் காட்டுக. குறிப்பிடப்பட்ட சரிதப்பகுதியையும் சுருக்கிவரைக.

7. “முன்னையுரைத்தான் முகமனேயொக்கும்” என்றார் அஃதின்னதென்பது பாசுரத்தாலறியக்கூடுமோ? கூடுமாயின் விளக்கிஎழுதுக.

8. அப்பர்சுவாமிகளுக்குக் காலத்தாற்பிற்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரிதப்பகுதியிலொன்றை நினைவுகூரும்படி வேறொருபடி

யாகக் குறிப்பிடும்விஷயம் எப்பாசுரத்திலமைந்துளது? அஃது எதற்காக அவ்வாறு கூறப்பட்டுள்ளது?

## V. பெரியதிருமொழி.

1. "கற்பகம்புலவர் களைகணென்றுலகிற் கண்டவாதொண்டரைப் பாடுஞ், சொற்பொருளாளீர்" "உடம்புருவில்மூன்றொன்றாய் மூர்த்திவேறாயுலகுய்ய நின்றானை" "வரைமீகானிற்றடம்பெருகு கருமுகிலை" "பிறரில்லைநுனக்கெனுமெல்லையினான்" பொருள் கூறுக.

2. "சேயனணியன்சிறியன்பெரியனென்பதுஞ்சிலர்பேச" எதற்காக இங்ஙனம் பேசுகின்றனர்? விசேடவுரைவரைக.

   "வெள்ளியான் கரியான் மணிநிறவண்ணன்" எவ்வெக்காலங்களில் இந்நிறமுண்டு?

3. "பிச்சச்சிறுபீலிபிடித்துலகிற்பிணந்தின்மடவாரவர்போலங்ஙனே அச்சமிலர் நாணிலர்" இவர்யார்? ஏனிவ்வாறுவமிக்கப்பட்டனர்?

4. இரணியன் இரணியாக்கன் இவ்விருவர்சரித்திரங்களை மாத்திரம் உணர்த்தும் பாசுரமொன்று காட்டிப்பதவுரைவரைக.

5. பாராருலகும்பனிமால்வரையுங்கடலுஞ்சுடருமிவையுண்டுமெனக், காரதென நின்றவன்" இதனாலறிந்துகொள்ளக்கூடிய தாற்பரியம் யாது?

6. "வெந்திறற்களிறும்வேலைவாயமுதும்விண்ணொடுவிண்ணவர்க்கரசும், இந்திரற்கருளியெனக்குமீந்தருளுமெந்தை" யென்றார் அவர்க்கு என்ன ஈந்தருளினர்?

7. "1 பரிவாய்கீண்டசீரானை" 2 "போரானைக்கொம்பொசித்தபோரேற்றினை" 3 "தூநிற்சென்றப், பொய்யறைவாய்ப்புகப்பெய்தமல்லர்மங்கக், காய்ந்தானை" 4 "பான்மதிக்கிடர்தீர்த்தவன்" இச்சரிதக் குறிப்புக்களை விளக்கியெழுதுக.

---

## பாலபண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

அ. கந்தசாமிப்பிள்ளை

---

## வசனமும் தர்க்கமும்

---

சித்தார்த்திஷு பங்குனிமீ 26உ (7-4-20) 10 மணிமுதல் 11½-மணிவரை.
(அம்சம் 60.)

க. (i) தருக்கம்—பெயர்க்காரணத்தையும் நூற்பயனையும் எழுதுக.

(ii) பலநூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழர் தருக்கம் பயின்றிருந்தனர்; பிற்காலப் புலவரும் அக்கருத்தொடுபட்ட கவிச்சுவை விரும்பினர்;—என்பதை நிரூபிக்க.

உ. (i) தரிசனம் ஆறு, பதார்த்தம் ஏழு, ஏதுப்போலி ஐந்து—வகை மட்டும் எழுதுக.

(ii) அசமவாயி, அநைகாந்திகம். சற்பிரதிபக்கம் — அருத்தம்மட்டும் எழுதுக.

(iii) ஆன்மா, பிரமை, பாதிதம்—இலக்கணம் மட்டும் எழுதுக.

ஙு. (i) "நாற்றந்தோன்ற அசைந்ததுவசந்தத்தென்றல்" "காலுக்கும் வாசமில்லை"---என்னும் திருவிளையாடற் புராணக்காரர் கூற்று முரணுமையைத் தருக்கவாயிலாய்க் காட்டுக.

(ii) பின்வருவனவற்றைப் பாடபுத்தகத்தில் இல்லாத உதாரணங் கொண்டு விளக்கிக்காட்டுக: --

சமவேதசமவாய சம்பந்தம், அந்நுவய வெதிரேகி, வியாப்பியத் தன்மைசித்தம்.

ச. (க) பின்வருபவை யெவ்வெவற்றிற்கு உதாரணமாகும்?

(i) மரம் அறிவுடையது; பெயருடைமையால்.

(ii) குதிரை மிருகம்; கொம்புடைமையால்.

(iii) குடம் அழிதற்பாலதன்று; ஆக்கப்படுதலால்.

(உ) தருக்கத்தை இலக்கணத்தோடு ஒப்ப ஒரு புலவர், எண்ணினூர்—அதுபொருந்துமாறு காட்டுக.

ரு. (க) ததாகதன், சடபிஞ்ஞன், சாக்கியன், அறவாழிஆள்வோன், அருளறம்பூண்டோன் — என்னும் பெயர் கௌதமருக்குக் கூறுவதேன்—விளக்குக.

(உ) (i) பௌத்தமதம் இந்துமதத்தின் பாகமாயடங்கும்;

(ii) அக்காலத்துக்கு இம்மதம் தோன்றவேண்டியது இன்றியமையாததாயிருந்தது;

(iii) நாயன்மாராதியோர் அதனைக்கடிந்ததும் சரி; இவற்றின் விடையை விளங்க எழுதுக.

(ங) ஏது நிகழ்ச்சி, நிர்வாணம், தாதுசூழ்வான், உபாசகர் இக் குழூஉக்குறியை விளக்குக.

(ச) நால்வகைவாய்மையைப்பற்றி விளக்குக.

## பாலபண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்.

சு. ஹரிஹரையர்.

## செய்யுளியற்றல்.

சித்தார்த்தி௵ பங்குனிமீ 26உ (7-4-20) 12மணி முதல் 1½மணி வரை.
(அம்சம் 60.)

1. க, கம், என்பன முறையே வெண்பாவின் முதலும் இறுதியுமாக வரவும்; முதலடியின் முதற்சீர் ஓரரசனையும், கடையடியின் இறுதிச் சீர்கள் ஓர்தலத்தினையும் உணர்த்தவும்; காழியர்கோன் கருமுருட்ட மண்வென்றகதையையமைத்து நேரிசை வெண்பாவொன்றியற்றுக

2. திருமால் பிரஹ்லாதாழ்வானையும், சிவபெருமான்நாவுக்கரசையும், ஆட்கொண்ட வைபவங்கள் விளங்க 30 அடிகட்கு மேற்படாத வெண்கலிப்பா ஒன்றியற்றுக.

## பாலபண்டிதர்வகுப்பு.

பரீக்ஷகர்

V. முத்துசாமி ஐயர் M. A. L. T.

## வியாசம்

சித்தார்த்தி௵ பங்குனிமீ 26உ (7-4-20) 2½ மணி முதல் 4½ மணி வரை.
(அம்சம் 60.)

1. உங்கள் இலக்கிய பாடத்தில் சம்பந்தபட்ட எவரேனும் ஒரு புலவருடைய கவித்திறமை ஜீவியசரிதை முதலியவற்றுக்குத்தக்க மேற்கோளாதாரந் தந்து, ஒரு வியாசம் 4 பக்கத்துக்கு மேற்படாமலெழுதுக. (20)

2. (க) "தனக்கெனவாழாப் பிறர்க்குரிய" தகைமை

(உ) "ஒத்ததறிவான்உயிர்வாழ்வான்மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்"

இவற்றில் யாதேனும் ஒன்றைப்பற்றி ஒரு வியாசம் சற்று முன்பின் 3 பக்கமெழுதித்தருக. (20)

3. தமிழ்நூல்களால் அறியப்படும் வியாபாரம் அல்லது விவசாயம் இவற்றில் ஒன்றைப்பற்றிய விவரங்களைத்தொகுத்து 3 பக்கத்துக்குக் குறையாது ஒரு வியாசம் வரைக. (20)

உ

கணபதிதுணை.

# ஞானம்.

விநாயகவணக்கம்.

திருவாக்குஞ்செய்கருமங்கைகூட்டுஞ்செஞ்சொற்
பெருவாக்கும்பீடும்பெருக்கு—முருவாக்கு
மாதலால்வானோருமானைமுகத்தானைக்
காதலாற்கூப்புவர்தங்கை.

குருவணக்கம்.

கயிலாயபரம்பரையிற்சிவஞானபோதநெறிகாட்டும்வெண்ணெய்
பயில்வாய்மைமெய்கண்டான்சந்ததிக்கோர்மெய்ஞ்ஞானபானுவாகிக்
குயிலாரும்பொழிற்றிருவாவடுதுறைவாழ்குருநமச்சிவாயதேவன்
சயிலாதிமரபுடையோன்றிருமரபுநீடூழிதழைகமாதோ.

அவையடக்கம்.

குற்றமேதெரிவார்குறுமாமுனி
சொற்றபாவினுமோர்குறைசொல்வரால்
கற்றிலாவென்கவிவழுவாயினு
முற்றுநாடிவல்லோருய்த்துரைக்கவே.

---

அன்பர்களே? ஈண்டெடுத்துரைக்கவந்தஞானமாவது? சரியை கிரியை யோகமென்றுமூன்றின்மேற்பட்டது.

சரியையாவது.

அவ்வாற்றால்பாமருவுந்திருக்கோயிலலகிடுதன்மெழுகலன்பின்
செவ்வாற்றான்மலர்கொய்துதார்மாலைதொடுத்தணிதறீபமேற்றன்
மெய்வாய்ப்பச்சிவனடியார்பணிந்தபணிநலனின்றுமேவலாதி
யிவ்வாற்றிற்றநெறிச்சரியையினைப்புரிவோரம்முலகில்வாழ்வார்.

கிரியையாவது.

ஈதியற்றிமுற்றியபின்மகநெறிக்காம்விசேடத்தையெய்திப்பூசைக்
கோதியகொண்டாதாரசத்திமுதற்சதாசிவீறுவகுசஞ்சத
தாதனமேமூர்த்திமுதற்பாவித்தாவாகித்தாவரணபூசை
யாதியசெய்தழலோம்புகிக்கிரியைவழாதாரெம்மருகுவாழ்வார்.

யோகமாவது.

இக்கிரியைமுற்றியபினியமாதியெட்டுறுப்பினியல்புவாய்ந்து
பக்கவழித்தனையடைத்துநடுநாடிபுறப்பயிற்றியாறாதாரந்
தொக்கபொருளுணர்ந்தேகிமதிவரைப்பினமுதுண்டுசோதியுள்ளாற்
புக்கழுந்துசகமார்க்கயோகுமப்போரெம்முருவம்பொருந்திவாழ்வார்.

எனக்காஞ்சிப்புராணத்திற் றழுவக்குழைந்தபடலத்திற் கூறிய வாறு காண்க.

உரைசெயிற்பரமஞானமொன்றுமேமுத்திக்கேது
சரியைநற்கிரியையோகந்தாமொருமூன்றுஞான
மருவுதற்கேறுவென்றுமறைபுகன்றுரைக்குமிந்தக்
கருவினைப்பொருளென்றெண்ணிக்கழிப்பவர்கயவரன்றே.

எனப் பிரபுலிங்கலீலையிற் சித்தராமையர்கதியிற் கூறியவாறுகாண்க.

விரும்புஞ்சரியைமுதன்மெய்ஞ்ஞானநான்கு
மரும்புமலர்காய்கனிபோலன்றோபராபரமே.

எனத்தாயுமானவருங்கூறியதுகாண்க.

இனி ஞானமாவது முற்செய்தவத்தா லுண்டாமெங்க. "ஐம் புலவேடரினயர்ந்தனைவளர்ந்தெனத் - தம்முதல்குருவுமாய்த் தவத் தினி லுணர்த்தவிட் - டன்னியமின்மையினரன்கழல்செலுமே" எனக் கூறிய சிவஞானபோதத்தில், எட்டாஞ்சூத்திரவுரையில், ஆன்மாக்க ளுக்கு முற்செய்தவத்தான் ஞானநிகழுமென்றது என மேற்கோளி லெடுத்துக்கொண்டு கூறியதுகாண்க. அம்மேற்கோளுக்குரைசெய்த திராவிடமகாபாடியகர்த்தர் படிமுறையானன்றி யிவ்வொரு பிறவியிற் செய்த தவந்தானே யமையாதென்பதுணர்த்துதற்கு முற்செய் தவ மென விசேடித்தார் என வுரைவகுத்திருக்கின்றார்.

இன்னுமச்சூத்திரத்திற்குரிய வுதாரணவெண்பாக்களில், ஒரு வெண்பா "பசித்துண்டுபின்னும்பசிப்பானையொக்கு - மிசைத்துவரு வினையிலின்ப - மிசைத்த - விருவினைபொப்பினிறப்பிறவத்தான் - மருவு வனுஞானத்தைவந்து" எனவுங்கூறியிருக்கின்றார். இதிலே யாகாதி கன்மங்களாற்சுவர்க்கபதவியனுபவித்தலே முத்தியென்பாரை மறுத்துப் "பசித்துண்டுபின்னும்பசிப்பானையொக்கு - மிசைத்துவருவினையி லின்பம்" எனக்கூறியதுங்காண்க.

சிவஞானசித்தியாரினும், "புறச்சமயநெறிநின்றுமகச்சமயம்புக் குப்புகன்மிருதிவழியுழன்றுபுகலுமாச்சிரம - வறத்துறைகளவை யடைந்துமருந்தவங்கள்புரிந்துமருங்கலைகள்பலதெரிந்துமாரணங்கள் படித்துஞ் - சிறப்புடையபுராணங்களுணர்ந்தும்வேதசிரப்பொருளை மிகத்தெளிந்துஞ்சென்றாற்சைவத் - திறத்தடைவரிதிற்சரியைகிரியா யோகஞ்செலுத்தியபின்ஞானத்தாற்சிவனடியைச்சேர்வர்" எனக்கூறி யிருக்கின்றார்.

இவ்வெட்டாஞ்சூத்திரத்திலே குருவுமாயுணர்த்தலாவது, முன்னேயுண்ணின்றுணர்த்தியதன்றிப் புறத்தே குருவடிவமாகவந்துதீக் கைசெய்து ஞானத்தையுணர்த்தலென்பது கருத்தாகக்கொள்க.

தீக்கையாவது, "தேக்குறுகேமொழியாய்மலஞ்சிக்குந்தீக்கை பலவிதமாமங்க-ணோக்குறுமொழியெண்ணநூல்யோகமௌத்திரியா றவனுமேழுண் - மீக்குறுமௌத்திரிதான்கியன்கிரியைஞானமென விருபாலாய்மூப் - பாற்கூறுபடுஞ்சமயவிசேடநிருவாணமெனும்பகுப் பினாலே" எனக்காஞ்சிப்புராணத்திற் றழுவக்குழைந்த படலத்திற் கூறியவாறுகாண்க. ஸ்பரிசம் - பரிசம். ஔத்திரிதீக்கை - ஓமசகிதமாகச் செய்யுந்தீக்கை.

இனி ஆளுடையபிள்ளையாராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், கண்ணப்பநாயனார் முதலாயினோர்க்குத் தவமின்றியு ஞான நிகழ்ந்தவாறென்னையெனின்? அவ்வாறில்லையென்பதுணர்த்துதற்கே அவ்வெட்டாஞ்சூத்திரத்தில், "தவத்தினிலுணர்த்த" என்றும், ஏதுவிலே, சரியைகிரியாயோகங்களைமேற்செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக்காட்டியல்லது அவை மோக்கத்தைக்கொடாவாகலான்" என்றுங்கூறியிருத்தல் காண்க.

இனிக் குருவடிவாகிவந்து தீக்கைசெய்துபதேசித்த ஞானத்தினாலேதான் சிவப்பேறெய்துமென்க; "மெய்ஞ்ஞானத்-தேவின்புவிஞ்ஞானகலர்க் - கஞ்ஞானவச்சகலர்க்குக்குருவாய் - மெய்ஞ்ஞானம்-பின்னுணர்த்துமயர்ப்பிரளயாகலருக்கு - முன்னுணர்த்துந்தான் குருவாய்முன்" என்றும், "இல்லாமுலைப்பாலுங்கண்ணீருமேந்திழையா-ளல்லாபுளவாமாலிந்திரத்தைப்போ-லில்லா - வருவாகிநின்றானையாரறிவார் பூமே - லுருவாகித்தோன்றுமேலன்று" எனச்சிவஞானபோதத்திலும், "மலப்பிருந்தாரைமுற்றத்தேசிட்டவர் - சாலப்பெரியரென்றுந்திபற - தவத்திற்றலைவரென்றுந்திபற" எனத் திருவுந்தியாரிலும், "உருவன்றியேநின்றுருவம்புணர்க்குங் - கருவன்றியேநின்றதாற்கருவாகு-மருவன்றியேநின்றமாயப்பிரானைக் - குருவன்றியாவர்க்குங்கூடவொண்ணாதே" எனத்திருமந்திரத்திலும், "உள்ளத்திருந்துமொளிர்தான்பரன்குரவன் - கள்ளத்தைத்தவிர்த்துக்காட்டினன் - வள்ள - லருவானகோலமோவக்கோலங்காட்டுங் - குருவானகோலமோகூறு," எனக்கூறியவாறுகாண்க.

இவ்வாறே குருவடிவாகவந்துபதேசித்த ஞானத்தாலே வாதவூரடிகள் சிவன்முத்தராயிருந்தாரெனத் திருவிளையாடற்புராணத்திலே, "ஆக்கமாகுமைந்தெழுத்தினிற்சுற்றியபாச - வீக்கநீக்கிமெய்ப்பானந்தம்விளைவித்துத்தப் - போக்குமீட்சியும்புறம்பலப்பூரணவடிவ - மாக்கிஞெனருதீபகம்போல்வருமண்ணல்" "பார்த்தபார்வையாலிருப்புண்டநீரெனப்பருகுக் - கீர்த்தன்றன்னையுங்குருமொழிசெய்தவுந்தம்மைப் - போர்த்தபாசமுந்தம்மையுமறந்துமெய்ப்போத - மூர்த்தியாபொன்றுமதிர்திலர்வாதவூர்முனிவர்" எனக்கூறியிருத்தல் காண்க. "மிக்கதொருபக்குவத்தின்மிருசத்திநிபாதமேவுதலுஞானம் விளைக்கோர்குருவினருளாற் - புக்கதுட்டித்தேகிட்டையபுரிந்தவர்கள்பூதலத்தேபுகழ்சிவன்முக்தராகித் - தக்கபிரியாப்பிரியமின்றியோட்டிற்றமனியத்திற்சமபுத்திபண்ணிச்சங்கமே - டொக்கவுறைந்திவண்வினையவனிவனைவிடாகேயுடங்கையாய்ச்சிவன்றேற்றமொன்றேகாண்பர்' என்றும், "சூரியகாந்தக்கல்லினிடத்தேசெய்யசுடர்தோன்றியிடச்சோதிதோன்றுமாபோ - லாரியனுமாசான்வந்தருளாற்றோன்றவடி ஞானமான்மாவிற்றோன்றுந்தோன்றத் - தூரியனுஞ்சிவன்றோன்றுந்தானுந்தோன்றுந்தொல்லுலகமெல்லாந்தன்னுள்ளேதோன்று - நேரிய

ஓய்ப்பரியனுமாயுயிர்க்குயிராயெங்குநின் றநிலையெல்லாமுன்னிகழ்ந்து தோன்றும்" எனச்சிவஞானசித்தியாரி லுக்கூறியிருத்தல் காண்க.

இனி ஞானம் மூன்றென் றும், அம்மூன்றையுமிரண்டாகவகுத்து இரண்டென் றுங்கூறுவர். மூன்றாவன. பாசஞானம், பசுஞானம், சிவ ஞானமென்பர். "வேதசாத்திரமிருதிபுராணகலைஞானம்விரும்ப சபைவைகரியாதித்திறங்கண்மேலா- நாதமுடிவானவெலாம்பாசஞான நனுகியான்மாவினைவிழ்நாடலாலே - காதலினுனன்பிரமமென் னு ஞானங்கருதுபசுஞானமிவனுடலிற்கட்டுண் - டோதியுணர்ந்தொன் றென்றுவுணர்ந்திடலாற்பசுவா - மொன்றாகச்சிவனியல்பிதுணர்ந்திடு வன் காணே"என்றும், "சிவனையவன் றிருவடி ஞானத்தாற்சேரச்செப்பு வது " என்றுஞ் சிவஞானசித்தியாரிற் கூறியவாறுகாண்க.

ஞானம் இரண்டாவன.

"சிவனடியேசிந்திக்குந்திருப்பெருகுசிவஞானம் - பவமதனையற மாற்றும்பாங்கினிலோங்கியஞான - முவமையிலாக்கலைஞானமுணர்வ ரியமெய்ஞ்ஞானந் - தவமுதல்வர்சம்பந்தர்தாமுணர்ந்தாரந்நிலையில்" எனப் பெரியபுராணம் ஆளுடையபிள்ளையார்புராணத்திற்கூறியவாறு காண்க; இக்கவியிலே, சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகுசிவஞான மாகியவுவமையிலாக் கலை ஞானம் பவமதனையறமாற்றும் பாங்கினி லோங்கிய ஞானமாகிய வுணர்வரியமெய்ஞ்ஞானந் தவமுதல்வர்சம்பந் தர் தாமுணர்ந்தாரந்நிலையில் எனக்கொண்டுகூட்டிப் பொருளுரைக்க வேண்டும். இங்ஙனம் பொருள்கொள்ளுங்கால் ஞானமிரண்டே யென்க.

இக்கவிக்கிவ்வாறே கலைஞானமென்றும், மெய்ஞ்ஞானமென் று மிரண்டாகப் பொருளுரைக்கவேண்டுமென்பதற்குச் சான்றியாதோ வெனில்? தணிகைப்புராணத்தில், "மேவருஞானமிரண்டவற் றொன் றுவிமலனார்பாததாமரையே-யோவருமன்பினுணர்திருவளிக்கு மொப்பிலாவுயர்கலைஞானக்-காவரும்பவத்தைவேரொடுங்களையுந்தக்க மெய்ஞ்ஞானமென்றிவற்றுற்- சாவதும்பிறப்புந்தணப்புறச்சிவத்தைச் சார்ந்ததுவாய்நிற்றல்யோகம்"என நான்கினையிரண்டாகவிளக்கிக் கூறி யிருக்கின்றவாறுகாண்க. இக்கலைஞானத்தை அபரஞானமென்றும்

மெய்ஞ்ஞானத்தைப் பரஞானமென் றுங்கூறுவர். திருவிளையாடற்
புராணம் நரிபரியாக்கியபடலத்திற் சுவாமியேறிவந்த வேதமாகிய
குதிரைக்குள்ள அங்கங்களை யெடுத்துரைக்குமிடத்துக் கண்களைக்
கூறும்போது, "ஒருமையாம் பரம்பரமாமுணர்வெனுங்கண்ணது"
எனக்கூறுமாறு காண்க.

அக் கலைஞானத்தின்மேலாகிய மெய்ஞ்ஞானத்தை, உண்மை
ஞானமென் றுங்கூறுவர்; அவ்வுண்மைஞானம் நான்கு வகைப்படும்.
"கேட்டலுடன்சிந்தித்தறெளிதனிட்டை கிளத்தலெனவீரிரண்டாங்
கிளக்கின்ஞானம் - வீட்டையடைந்திடுவர்நிட்டைமேவினோர்கண்மே
வாதுதப்பினவர்மேலாயபதங்கட் - கிட்டியபுண்ணியராதராங்கியின்ப
மினிதுநுகர்ந்தாரருளாலிந்தப்பார்மே - லுட்டியுநற்குலத்தினில்வந்
தவதரித்துக்குருவான்ஞானநிட்டையடைந்தடைவர்கா தன்றேமே"
எனச் சிவஞானசித்தியாரிற் கூறியவாறுகாண்க.

இந்த ஞானநிட்டையு மதன்பயனுமில்லாரெனக் காஞ்சிப்புரா
ணத்திலே, "உணர்பொருளுமுணர்வானு முணர்வுமெனும்பகுப்பொ
ழியாதொழிந்துபானுப் - புணர்விழியுநீர்நிழலுந்தீயிரும்பும் புனலு
வரும்பருதிமீனுந்- தணையவிரண்டறுகலப்பினெம்முடனுப்பேரின்பந்
துய்த்துவாழ்வா - ரிணர்விரைத்தமலர்க்கோதாயவர்வடிவேயெமக்கி
னியகோயிலாமால்" எனக்கூறியிருத்தல்காண்க. இவ்விரண்டறு
கலப்பையே, திருவானைக்காப்புராணம், ஞானவுபதேசப்படலத்தில்,
"போதலாருயிரபேதப்பாவனைபுரிவதே-மாதராயுயர்முத்தி" என்றும்,
சிவஞானசித்தியாரில், "கண்ணுதலினிறைவதனிற்கலந்து" என்றுங்
கூறியிருத்தல்காண்க. இதனை அத்துவிதக்கலப்பென்பர்; அத்துவித
மென்னுஞ்சொற்குப்பொருள் அத்துவிதவாக்கியத்தெளிவுரையிற்
காண்க.

இச்சித்தாந்தஞானநெறியே வீடுபேற்றிற்குநேர்வழியென உப
மன்னியர் அகத்தியர்முதலிய வுயர்ந்தோரெல்லாம் வாயுசங்கிதை,
சிவகீதைமுதலியவற்றிற் கூறியிருக்கவுந்தெளியமாட்டாது, உலகரெ
லாம் வேறுபிதற்றிப் பாவக்குழியில்வீழ்வார்கள். ஈதென்னமயக்கம்
எனச்சிவஞானசித்தியாரில், "சித்தாந்தத்தேசிவன்றன் றிருக்கடைக்

கண்சாத்திச்செனனமொன்றிலேசிவன்முத்தராக வைத்தாண்டமலர் கழுவிஞானவாரிமகிழ்த்தானந்தப்பொழிந்துவரும்பிறப்பை யறுத்து - முத்தாந்தப்பாதமலர்க்கீழ்வைப்பனென்றுமொழிந்திடவுமுலகரெலா மூர்க்கராகிப் - பித்தாந்தப்பெரும்பிதற்றுப்பிதற்றிப்பாவப்பெருங் குழியில்வீழ்ந்திடுவரிதுவென்னபிராந்தி" எனக்கூறியிருத்தல்காண்க. கேட்பவர்சிரமநோக்கியிவ்வளவுஞ் சுருங்கவுரைத்ததென்க. கற்றறிவுடையோர்க்கு இக்கவிகளின்பொருள்விளங்குமாதலால் விரிவஞ்சிப் பொருள்விரித்துரைக்கவில்லை. நல்லறிவுடையோரிந்த ஞானநெறியைக்கொண்டொழுகி யுய்வாராக.

"மெய்ம்மையாமுழவைச்செய்துவிருப்பெனும்வித்தைவித்திப்
பொய்ம்மையாங்களையைவாங்கிப்பொறையெனுநீரைப்பாய்ச்சித்
தம்மையுநோக்கிக்கண்டுதகவெனும்வேலியிட்டுச்
செம்மையுணிற்பராகிற்சிவகதிவிளையுமன்றே"

எனத்தேவாரத்திற்கூறியதுங்கண்டு கடைப்பிடிக்க. சுபம்.

ஒருமதியாத்தன்முகங்கண்டுற்றவர்மற்றவர்முகங்கண்டுரைத்தேற்காமற்
றருமதியாகம்புரிவோன்பெத்தாச்சிதன்சபைமுன்றகைஞானத்தைப்
பெருமதியாலாராய்ந்துபிரசங்கஞ்செய்கவெனப்பேணிமீனம்
வருமதியாமிலக்கருவூர்த்திருநாளிலெடுத்துரைத்துவாழ்வுற்றேமே.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனத்துவித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய,

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

# சிசுபால சரிதம்.

மஹாகாவியமாய் வடமொழியிலே வழங்கும் மாககாவிய மஹா வாக்கியத்தைப் பெரும்பாலும் மூலவாக்கியமாய் முன்வைத்துச் சேதிநாட்டரசன் சிசுபாலன் சரிதத்தைக் கதைசேர்ந்த வாசகமாய் எழுதி வருகின்றாம். ஆதியிலே நின்ற நாரதர் காதையையும், அடுத்து நின்ற மந்திர காதையையும் எடுத்து இந்தச் செந்தமிழில் எழுதுகின்றோம். தமிழ்மொழிவளர்ச்சியிலும், தமிழ்மொழியுணர்ச்சியிலும் கருத்து மிக்க பிரபுக்களும், நூலுரைகளிலே சென்று திருத்தம் மிக்க புலவர்களும் நோக்கக்கடவர். பிரகடனம் பெறுதற்குத் திரவிய சகாயமும் பிழைநீங்கிப் பரிசுத்தமாதலும் வரவேண்டும்.

உ

## நாரதர் வருகை.

உலககாரணராகிய நாராயணமூர்த்தி முன்னொருகாலத்திலே பூவுலகத்திலே பாரதகண்டத்திலே வடமதுரையிலே யதுகுலதிலகன் வசுதேவன் என்பவனுக்குந் தேவகி என்பவளுக்குப் புத்திரராய்ப் பிறந்து கிருஷ்ணர் என்னுந் திருநாமமும் பெற்று அற்புதமான பற்பல செயல்களைச் செய்தும், விற்பனமான விளையாடல்களைச் செய்தும், வீரச்செயல்களைச் செய்தும், தீரச்செயல்களைச் செய்தும், தீயவர்களைச் செறுத்து நீத்தும், நல்லவர்களை மதித்துக் காத்தும் ஒப்புயர்வற்ற உத்தம புருடராய்த் துவாரகை என்னுந் திருநகரியிலே அரசுவீற்றிருந்தார். வாசுதேவன், கண்ணபிரான் முதலிய நாமங்களும் அவருக்கு வழங்கப்படும்.

அந்த நாராயண மூர்த்தியாலே இராமாவதாரத்திற் கொல்லப்பட்ட இராவணன் என்னும் இராக்கதனும் வசுதேவன்றங்கையாகிய சாத்துவதி என்னும் நங்கைக்கும் தமகோஷன் என்பவனுக்கும் மகனாய்ப் பிறந்து சிசுபாலன் என்னும் பேரும்பெற்றுத் தீக்குணங்களிலே

மிக்குத் தீத்தொழிலே கன்றிப் பலரையும் வருத்திச் சேதி என்னுந் தேசத்துக்கு ஆதிபனுமாய் மாகிஷ்மதி என்னும் மாநகரியிலே அரசுவீற்றிருந்தான்.

இங்கிவர் இருவரும் இவ்வாறு வீற்றிருக்கும் நாள்களிலே ஒரு நாள் அங்கங்கே நிகழும் காரியங்களை அங்கங்கேபோய் நன்குபார்த்தறிந்து வந்து அவரவர்க்குத் தெரிவிக்குஞ் சுபாவகுணமுடைய தேவமுனிவராகிய நாரதமுனிவர் தேவுலகுக்கும் போனார். அந்த நாரதரை இந்திரன்கண்டு எதிர்கொண்டழைத்துப்போய் இன்சொல் முதலியவற்றால் இனிமைபெற உபசரித்து இருக்கையிலிருத்தி நானாவித காரியங்களையும் பேசிக்கொண்டாடியபின் சிசுபாலன்செய்யுந் தீங்குகளையுந் தெளிவாக எடுத்துச்சொல்லி இந்தச் சிசுபாலனை எவ்வழியானுங் கொல்லுவிக்கவேண்டும். இவனைக் கொல்ல வல்லவர் யாவர்? என்று கருதும்போதெல்லாம் கண்ணபிரான் என்னுந் திருநாமமே மனத்திலும் வாயிலும் வருகின்றது. சுவாமீ! நீர் இப்பொழுது பூவுலகிற்போய்த் துவாரகாபுரியில் வீற்றிருக்குங் கண்ணபிரானைக் கண்டு சிசுபாலன்புரியுந்தீங்குகளையுஞ் செவ்வனே சொல்லிச் "சிசுபாலனைக் கொன்றருளும்படி யான்கேட்கின்றேன்" என்பதையும் அவர்க்குச்சொல்லி வருதல்வேண்டும் என்று வணங்கிக்கேட்டான். நாரதமுனிவரும் நல்லகாரியம் என்றுடன்பட்டுச் சடிதியில் விடையும் பெற்றுத் தேவுலகினின்றும் பூவுலகை நோக்கித் துவாரகாபுரிக்கு நேரே இறங்கிவந்தார்.

இறங்கிவருகின்ற நாரதமுனிவருடைய திருமேனியின் செவ்வொளியே பூமிக்கு முதலிலே புலப்பட்டது. அவ்வொளியைக் கண்டார் யாவரும் ஒளியுருவமான பொருள் ஒன்று மேலே நின்று கீழே வருகின்றது. சூரியனுடைய ஒளியோ? அக்கினியுடைய ஒளியோ? சூரியனுடைய ஒளியாயின்; குறுக்கே சரிந்து செல்லும். அக்கினியுடைய ஒளியாயின் மேலே நிமிர்ந்து செல்லும். இந்த ஒளியோ எந்தப்பக்கத்திலும் பரந்து பாய்கின்றது. ஆதலால் இவையிரண்டுமன்று. யாதோ வேறொன்று. யாவதென்று தெரிகிலம் அற்புதம்! அற்புதம்! என்று சிந்தித்துத் திகைக்கும்போது கண்ணபிரானும் அதனைக்கண்டு பலவகையாக எண்ணினார். முதற்கண் ஒளித்திரட்சி

ஒன்று என்றும் அதற்குப் பின்னர் உருவுடைய பொருள் ஒன்று என்றும், அதற்கும் பின்னர்ப் புருடன் ஒருவனென்றும் படிப்படியே வரவர எண்ணிவந்து கிட்டியவுடனே நாரதமுனிவர் என்று நேரே கண்டார். கண்டவுடனே கதுமென எழுந்து வணங்கி இன்சொல்லுங் கூறி உள்ளே கொண்டுபோய் அருக்கியம் முதலியன கொடுத்து இருக்கையில் இருத்தி மனவாக்குக் காயங்களாலே வழிபாடு செய்தார். நாரதமுனிவருந் நீர்த்தகீர் தெளித்து வாழ்த்துரையுங் கூறி இருக்கும்படி கட்டளை செய்யக் கண்ணபிரானும் இருந்து நாரதமுனிவரை நோக்கிச் சொல்லுவார்.

## கண்ணபிரான் கூற்று.

பகவானே!

இப்பொழுது நீர் இங்கே எழுந்தருளி வந்து நமக்கெல்லாம் நற்காட்சியைத் தந்தீர்! உமது காட்சி புண்ணியங்களை ஆக்குகின்றது. பாவங்களைப் போக்குகின்றது! உமது வருகை நமது தைரியத்தை விக்குகின்றது! உமது மகிமை நமது மனவிருளை நீக்குகின்றது! நாமுஞ் செயற்பாலன யாவையுஞ் செய்து முடித்துளேமாயினும், ஆயினும் உமது வாக்கையுங் கேட்கும் வேட்கையுமுடையேம் என்றார். ஆர்வமோடும் அந்த வார்த்தைகளை நாரதமுனிவர் கேட்டு மனம் மகிழ்ந்து கண்ணபிரானை நோக்கிச் சொல்லுவார்.

## நாரதர்கூற்று.

புருடோத்தமரே!

நீர் முழுமுதற் பொருளாய் நின்று மூவுலகையுங் காவல் புரிகின்றீர். முனிவராயுள்ளோர்க்கும் முதல்வராய் நின்று கிருபை செய்கின்றீர். முத்தியை விரும்பும் பத்தசனங்களுக்கும் முத்தியைக் கொடுக்கின்றீர். கபிலர் முதலிய யோகிகளுக்குங் காட்சி கொடுத்தீர். நல்லோரைக் காக்கும் பொருட்டுந் தீயோர்களைப் போக்கும் பொருட்டும் பலவகை அவதாரங்களை எடுத்தீர். பன்றியவதாரமாய் வந்து

கடலின் கீழேபோன பூமியை மேலே கொணர்ந்து விடுத்தீர். நாரசிங்காவதாரமாய் வந்து இரணியன் என்னும் கொடியவனை நாமசேடம் பெற நகத்தாற் படுத்தீர். ஸ்ரீராமாவதாரத்திலே இராவணன் என்னுங் கடியவனைப் பத்துத் தலைகளுஞ் சிதறப் பாணந்தொடுத்து ஜீவரோடுங் கெடுத்தீர். அந்த இராவணனன்றனே இப்போது சிசுபாலன் என வந்து சேதி என்னுந் தேசத்துக்கு அரசனுமாய் நின்று நீதி என்பது சிறிதுமின்றி விடரோஞ் செய்கின்றான். அவ்வேறு தேவர்க்கும் அசுரர்க்கும் யாவர்க்கும் நன்மை தீமைகளைச் செய்தற்கு வல்ல அத்துணைச் சாமர்த்தியர் மிக்க வித்தக வீரன் பிரமாவின் சொல்லையும் பொருள் என்று கேளான். இங்கே நின்று யாவர்க்கும் இடர்புரிய விடாமல் இயமலோகம்போக அவனை அனுப்பிவைக்கும்படி இந்திரன் உம்மை இரந்து கேட்கின்றான் என்று சொல்லித் தமது வார்த்தைகளை நாரதமுனிவரும் முடித்தார். கண்ணபிரானும் ஓமென்று சொல்லி உடன்பட்டார்.

## தெரிந்து செய்தல்.

சிசுபாலன் செயல்களைக் கண்ணபிரான் நினைந்து நினைந்து நெஞ்சம் வருந்தினர். சிசுபாலன்மேற் சீற்றமும் போர்த்தொழிற்கண் ஊற்றமும் மிகுந்தார். சேனைகளோடுஞ் செல்லவேண்டும் என்றுஞ் சிசுபாலனைக்கொல்லவேண்டும் என்றுஞ் சிந்தனை கொண்டார். அந்தச் சமயத்திலே "இராஜசூய யாகம் நடாத்துதற்கு நீர் வரவேண்டும்" என்று தருமபுத்திரர் அனுப்பிய தூதும் வந்தது. அதற்கும் போதல் அவசியம் என்பதையும் நினைத்து "இரண்டுகன்றினுக்கிரங்குமோராவென" (இராமா) வருந்தி, "இரண்டு காரியங்கள் ஒருங்கு வந்து எதிர்க்கிருக்கின்றன. ஒன்று தேவகாரியம் ஒன்று மித்திரகாரியம். இரண்டும் அவசியஞ் செய்யவேண்டியன. இரண்டையும் ஒருகாலத்திலே முடிப்பது எப்படி ?" என்று கருதி ஒன்றுந் தெரியாமல் மனந்தடுமாறித் தெரிந்த முதியோரோடுஞ் சலச்சிதெண்ணித் துணிவுபெறக் கருதிப் பலராமர் உத்தவர் என்னும் இருவரையுங் கூட்டிக்கொண்டு தனியிடம் ஒன்றிற்போய் அவர்களையும் இருத்தித் தாமும் இருந்து நிகழ்ந்த காரியத்தையுந் தமது கருத்தையுஞ் சொல்லுவார். ...

முத்தோர்களே!

நீங்கள் இப்பொழுது நாம் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு நன்றாக எண்ணி உங்கள் கருத்தையுஞ் சொல்லுங்கள். இப்போது செய்யப்படவேண்டியனவாய் இரண்டு காரியங்கள் எமக்கு வந்திருக்கின்றன. ஒன்று தேவகாரியம். மற்றது மித்திரகாரியம். சிசுபாலனைக் கொல்லவேண்டும் என்று இந்திரன் கேட்கின்றான். இது தேவகாரியம். தமது யாகத்துக்கு வரவேண்டும் என்று தருமபுத்திரர் கேட்கின்றார். இது மித்திரகாரியம். இரண்டையும் ஒருகாலத்திலே முடிப்பது எப்படி? சிசுபாலனைக் கொலைபுரிந்து தேவரிடர் தீர்த்தலாகிய தேவகாரியம் அவசியமா? தருமபுத்திரருடைய யாகத்தைச் சென்று நின்று நடாத்துதலாகிய மித்திரகாரியம் அவசியமா? எது செய்யவேண்டும் என்பது தெரியவில்லை. மெய்யுணர்வுடையோருஞ் செய்யுங் காரியங்களிலே சிந்தனை தடுமாறுவர். பின்னை யாம் துணிவு பெறுவது எப்படி? ஆயினும் நாந் துணிந்த கருத்தையும் உங்களுக்குச் சொல்லுகின்றோம்.

௨

# கண்ணபிரான்கருத்து.

தருமபுத்திரரோ தமது சகோதரர்களாகிய வீமன்முதலியவீரர்களை அனுப்பித் திக்குகளிலுள்ள அரசர்களையெல்லாம் வென்று கீழ்ப்படுத்தி அரசிறைகளும் பெற்று அரசர்க்கரசராய் விளங்குகின்றார். அவருக்கு மாறாய் அரசர் ஒருவரும் இப்போது எழும்பத்துணியார். வீமன்முதலியவீரருந் துணைவராய் விளங்குகின்றார்கள். எமது துணைவேண்டாமலுந் தமது யாகத்தை இனிதுமுடிப்பார். ஆதலால் அவருடைய யாகத்துக்குத் துணைபுரியப்போதல் அதிகம் அவசியமன்று. சிசுபாலனோ எமது பிதாவின் சகோதரிபுத்திரன். எனக்கு மைத்துனன். அவ்வுரிமைநோக்கிப் பைய மெல்லப் பார்ப்போம் என்று பராமுகமாக விடப்படத்தக்கவனுமல்லன். வளர்ந்து மிகுந்து வரும் நோயே போன்று பகைத்திற மிகைத்துவருகின்றான். எமக்குந் துரோகஞ்செய்கின்றான் பிறர்க்குந் துரோகஞ்செய்கின்றான். பலரும் மனம் பதைத்து வருந்துகின்றார். எமக்குத்துரோகஞ்செய்

கின்றானே என்று மனக்கவலை கொள்கின்றிலர். பலர்க்குந் துரோகம் செய்கின்றான் என்றே மனக்கவலைகொண்டு பரிதபிக்கின்றார். அந்தப் பாதகனால்வருந்துயரம் ஆற்றரிது! ஆற்றரிது! பரிதாபம்! பரிதாபம்!

கந்தபுராணம்.

ஏற்றெழு வன்னிமே லினிது துஞ்சலாம்
தோற்றிய கடுவிட மெனினுந் துய்க்கலாம்
மாற்றல ரலைத்திட வந்த வெந்துயர்
ஆற்றரி தாற்றரி தலமிப் புன்மையே.

இப்படியெல்லாம் இருத்தலாற் சிசுபாலனைக் கொலைபுரிதலாகிய தேவகாரியமே அவசியம் என்று கருதுகின்றாம். இதுவே நமது கருத்தாகும் என்று கண்ணபிரான் சொல்லிமுடித்தார். அதன்பின் சேடாவதாரபுருடரும், அறிவாளரும், மூதாளருமாகிய பலராமர் தமது கருத்தைச் சொல்லுகின்றார்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.

# உவமைப்போலிவிளக்கம்.

(௨௱௪-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி, சிவாக்கிரயோகிகளுரையிற்கூறிய முறையை ஆராயுமிடத்து அது இப்பகுதியில், (மறைஞானதேசிகருரையில் "தப்பில் போலியுமப்பொருட்டாகும்" என்றார் தொல்காப்பியனாரும் என்று ஒரியைபுமில்லாது கிடக்குமிடைச்செருகல்போல) பண்டிதமானிகளால் கூட்டியுங் குறைத்துந் திருத்தியும் இடைச்செருகலாயெழுதப்பட்ட பல பிழைபாடு காணப்படுதலால் அவ்வுரைப்பொருளைத் தெளிவுற விளக்கலரிதாயிருக்கிறது. இதனைப் பின்வருமாற்றாலறியலாம்.

"விளங்குவமைப்போலியீரொன்பான்காண்டும்" என்றது உவமைபோற்பிரகாசித்து உவமாபாசமாகப்போவது 'சாத்தியவிகலன்,' 'சாதனவிகலன்' என்றிரண்டுவகையாகப் பதினெட்டுப்பேதமாம்" என்று உரையெழுதப்பட்டிருக்கிறது. இதனால் சாத்தியவிகலபேதம் ஒன்பதும், சாதனவிகலபேதம் ஒன்பதும் ஆகப்பதினெட்டுப்பேதம்

கூறவேண்டும். அவ்வாறு விவரணவாக்கியங்களாற் பெறப்படாமை யால் அவை ஐகசுண்டியமுடையனவாகத்தோன்றவில்லை. ஆயினும் அவற்றுள் சாத்தியவிகலம், சாதனவிகலம் என்னுமிரண்டற்கும் எழுதியிருக்கும் விவரணம்மட்டும் பொருத்தமுடையதாயிருக்கிறது.

சாதருமியதிட்டாந்தவகையில், (1) சாத்தியவைகல்யம், (2) சாதனவைகல்யம், (3) உபயவைகல்யம், (4) ஸ்வரூபவைகல்யம் என்று சொல்லப்பட்டநான்கும் முறையே மறைஞானதேசிகருரையிற்கூறிய (1) சாத்தியவிகலன் (2) சாதனவிகலன் (3) உபயவிகலன் (4) ஆசிரயவீனன் என வழங்கப்பட்ட நான்குமாம். அவற்றுள் ஒவ்வொன்றும் வெதிரேகதிட்டாந்தத்துக்குமுதாரணமென்றெழுதியிருப்பது சிறிதும் பொருந்தாதிருக்கிறது. அன்னுவயத்துக்கு உரியன வெதிரேகத்தில் மாறுபடுமாதலால் வெதிரேகத்துள்ளும் ஒவ்வொன்றற்கும் வெவ்வேறுதாரணம் மறைஞானதேசிகருரையில் காட்டியவாறே காட்ட வேண்டும்.

இரண்டாவதாகக்காட்டிய சாதனவைகல்ய வுதாரணத்தில் 'திருஷ்டம்போல' என்றெழுதியிருப்பது தவறாயிருக்கிறது; அது, "அதிருஷ்டம்போல" என்றெழுதப்படவேண்டும்.

வைதன்மியதிட்டாந்தத்துள் நான்காவதற்கு ஆசிரயாபாவ வைகல்யம் என்று பெயர்கொடுத்திருப்பதும் தவறு. அது "ஆசிரய வைகல்யம்" என்றே வழங்கத்தகும். இவையெல்லாம் இடைச்செருகலானும், ஏடெழுதுவோர் பராக்கானும்நேர்ந்த பிழைகளாம்.

வைதன்மியதிட்டாந்தத்துள் 5, சாத்தியாபாவவைகல்யம் 6, சாதனாபாவவைகல்யம் 7, உபயாபாவவைகல்யம் 8, ஆசிரயவைகல்யம் என்பன முறையே மறைஞானதேசிகருரையுள் சாத்தியாவியாவிருத்தம், சாதனாவியாவிருத்தம், உபயாவியாவிருத்தம், ஆசிரயவீனம் என வழங்கப்பட்டன. இவ்வெட்டும் அர்த்ததோஷமுடையனவாகக்கொண்டு ஏனையபத்தும் உக்திதோஷமுடையனவாகப் பின்வருமாறு காட்டப்பட்டன. அவை வருமாறு.

(1) அன்னுவயதிட்டாந்தத்திற்குவேறுப்ச்சொல்லுகையும்

(2) அன்னுவயவெதிரேகவியாத்திக்குவேறுப்ச்சொல்லுகையும்

(3) அவ்வியாத்திகளிற்றானே சாத்தியசாதனங்களைவேறுப்ச்சொல்லுகையும்.

(4) சாத்தியத்தைச்சாதனமாகச்சொல்லுகையும்

(5)° சாதனத்தைச் சாத்தியமாகச் சொல்லுகையும், என்றன்றுவயானுமானத்தில் உக்திதோஷமைந்துவிதம். வெதிரேகானுமானத்தும் ஐந்துவிதம். ஆகப்பத்துவிதமென்றெழுதப்பட்டன.

(1) இவற்றுள் அன்னுவயதிட்டாந்தத்துக்குவேறுப்ச் சொல்லுகை என்றது பொருத்தமுடையது.

(2) அன்னுவயவெதிரேக வியாத்திக்குவேறுப்ச்சொல்லுகை என்றெழுதப்பட்டது தவறு. வெதிரேகவியாத்திக்குவேறுப்ச் சொல்லுகை இதனுடன்சேர்த்து ஒன்றாகவைத் தெண்ணுதற்குரியதன்று. ஒன்றாகவைத்தெண்ணுதல் கூடுமாயின், இதனோடொப்பவே முன்சொன்ன அன்னுவயதிட்டாந்தத்துக்குவேறுப்ச் சொல்லுகை என்பதனையும், அன்னுவயவெதிரேகதிட்டாந்தத்துக்கு வேறுப்ச்சொல்லுகை என்றெழுதியிருக்கவேண்டும். அப்படியெழுதியிருந்தால் எண்ணியமுறையினிறுதியில் இப்படியே வெதிரேகததிலும் ஐந்துவிதம் என்று எழுதுதற்கிடமின்றாம். ஆதலால் இரண்டாவதாகக்காட்டிய உக்திதோஷ லக்ஷணத்தில் வெதிரேகசப்தம் வேண்டாதாயிற்று; இவ்வாறே மேலுங்கண்டுகொள்க.

(3) அவ்வியாத்திகளிற்றானே சாத்திய சாதனங்களைவேறுப்ச் சொல்லுகையென்றிருப்பது முற்கூறியமுறையே அந்துவயவியாத்தியிற் சாத்தியத்தை வேறுய்ச்சொல்லுகை எனப் பிரித்துக்கூறவேண்டும். கூறவே,

(4) நான்காவது உக்திதோஷம், அன்னுவயவியாத்தியின் சாதனத்தை வேறுய்ச்சொல்லுகை என எழுதிக்கொள்ளவேண்டும்.

(5) சாத்தியத்தைச்சாதனமாகச் சொல்லுகையும், சாதனத்தைச் சாத்தியமாகச் சொல்லுகையும் என்றிருகூறுபடச்சொல்லிஉதாரணங்காட்டியிருப்பது ஏதுப்போலியாவதன்றித் திட்டாந்தப்போலியாகாமையால் அது பொருந்துவதன்று. ஆதலால் அது சாத்திய சாதனங்களை வேறுய்ச்சொல்லுகை என்று திருத்தப்படவேண்டும். இவ்வாறு திருத்திக்கொண்டால் இப்படியே வெதிரேகத்தும் ஐந்துவிதம் ஆகப்பத்துவிதம் என்றெழுதியிருப்பது பொருந்துவதாகும்.

பத்திராதிபர்.

---

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் சித்தார்த்தி௵ பங்குனி௴ 24, 25, 26 (1920-௵ ஏப்பிரல்௴ 5, 6, 7) ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறி யோக்கியதா பத்திரம்பெறும் மாணக்கரின் விவரம்.

பிரவேசபண்டிதபரீக்ஷை

II-வது வகுப்பு.

| தொடர்ச்சி நிர். | ரிஜிஸ்டர் நிர். | |
|---|---|---|
| 1. | 15. | S. சீதாராமன், Door No. 198. கீழைச்சித்திர வீதி, ஸ்ரீரங்கம். |

B. இராஜராஜேச்வரஸேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

---

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1920-௵ மார்ச்சு௴ 6டையில் நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணக்கர்களின் விவரம்.

பீஏ. பரீக்ஷை.

I-வது வகுப்பு.

| தொடர்ச்சி நிர். | ரிஜிஸ்டர் நிர். | |
|---|---|---|
| 1. | 1. | உ. வே. கோவிந்தசாமிராஜு, S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி. (முதற்பரிசு ரூ. 50-பெறத்தக்க தங்கப்பதக்கம்.) |

---

## யப். ஏ. பரீக்ஷை.

### I-வது வகுப்பு.

1. 5. T. R. வெங்கடாசலமூர்த்தி, S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
(முதற்பரிசு. ரூ. 40-பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2. 4. C. S. ராஜாராமராஜேந்திரநாத், S.P.G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
(இரண்டாவது பரிசு. ரூ. 35.)

---

### II-வது வகுப்பு.

1. 30. P. S. வெங்கட்டராமன், மஹாராஜாகாலேஜ், புதுக்கோட்டை.
2. 21. R. S. சுப்பிரமணியன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
3. 27. S. குற்றாலலிங்கம்பிள்ளை, மஹாராஜாகாலேஜ், திருவனந்தபுரம்.
4. 10. H. S. இராமஸ்வாமி, ஸெண்ட்ஜோசப்காலேஜ், திருச்சிராப்பள்ளி.
5. 32. R. சீனிவாசசர்மா, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
6. 29. T. A. இராமச்சந்திரன், முனிசிபல் காலேஜ், சேலம்.
7. 8. S. குப்புசாமி, S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
8. 18. P. K. சுப்பிரமணியன், கவர்ன்மெண்ட்காலேஜ், கும்பகோணம்.
9. 26. A. S. பத்மநாபன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
10. 34. P S. முத்தையன், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
11. 33. G. ராமச்சந்திரன், ௸ ௸

---

## மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

### II-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1. | 239. | R. சேஷாத்திரி, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி. |
| 2. | 101. | T சுந்தரமூர்த்தி, St. Francis Xaviers' High School, பாளையங்கோட்டை. |
| 3. | 123. | A. பழனியப்பன், ஸெண்ட்மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர். |
| 4. | 46. | K. நாகலிங்கம், ராஜாஹைஸ்கூல், இராமநாதபுரம். |
| 5. | 111. | A. வைத்தியநாதன், முனிசிபல்காலேஜ், சேலம். |
| 6. | 112. | O. K. பெருமாள், ஷை ஷை |
| 7. | 94. | T. சீனிவாசன், St. FrancisXaviers' High School, பாளையங்கோட்டை. |
| 8. | 114. | V. வெங்கடரமணன், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 9 | 220. | K. கங்காதரன், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை. |
| 10. | 98. | O. பரமசிவன், St. Francis Xaviers' High School, பாளையங்கோட்டை. |
| 11. | 245. | M. J. செல்லையா, கால்டுவெல் ஹைஸ்கூல், தூத்துக்குடி. |
| 12. | 303. | N. சடகோபன், போர்டுஹைஸ்கூல், விழுப்புரம். |
| 13. | 83. | A. N. மகரபூஷணன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி. |
| 14. | 224. | C. M. எதிராஜம்(பெண்), Presidency Training School for Mistresses, Egmore, சென்னை. |
| 15. | 233. | T. தொப்பையா, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி. |
| 16. | 277. | N. நரசிம்மராவ், விக்டோரியாஹைஸ்கூல், சிவகாசி. |

B. இராஜராஜேச்வரசேதுபதி,

அக்கிராசனாதிபதி,

24—8—20. மதுரைத்தமிழ்ச்சங்கம்.

உ

# தனிநிலைச்செய்யுட்கோவை.

(௧௪௪-ஆம்பக்கத்தொடர்ச்சி.)

15. கள்ளற் கஞ்சித் தன்னடிப் புகுநரை
யுண்மைக் கஞ்சி யுறலவர்க் குரைப்பதூஉ
மெய்யே பெறூஉ மேநினி நிறுத்தச் (நிறுவச்)
செய்கொலை முதல தீய வெறூஉக்
கொள்ளும் வழக்காறு கொள்ளா துலகம்
வறிஞன் றானறி வகையற வழங்கியுஞ்
சிறிதுமுத வில்லான் பொருளுடை செய்வோன்
சொற்சுவை தழாஅத் துன்றுசெல் வர்க்குத்
தானே வந்து தருகுவன் மாதோ
முறைமைதரு கட்டளை முற்றினோன் மொழிந்தவை
நெறியன் றெனினு நிலங்கைக் கொள்ளு
நிறுவகட் டளையிலோ னீள்கலை நிலையறீஇப்
பொறைநட் டமுதிற் புகல்கொளா துலகம்
பொருந்துயிர் போக்கும் புரிநஞ் செனினுநன்
மருந்தே யாகு மருத்துவன் கைப்படின்
வழூஉச்சொல் லெனினும் வழங்குவ னாக தேர்ந்த
குழூஉக்கடைக் குறுகிற் குலாஅய்நலன் பயக்கு
மின்னண முலகத் தியலுந் திறனெலா
னன்கறிந் தொப்ப நடத்தன்
மன்பதை தமக்கெலாம் வாய்ந்தநற் கடனே.